# பழமொழி நானூறு வலியுறுத்தும் தமிழரின் பண்பாட்டு மரபுகள்

**வி.புவனேஸ்வரி,**
**தமிழ்த்துறை,பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி,**
**கோபிசெட்டிபாளையம். ஈரோடு மாவட்டம்.**
bhuvanaofficial97@gmail.com

**6**

பண்பாடு மற்றம் கலாச்சாரம் என்பது பொதுவாக மனித செயல்களையும், செயல்பாடுகளையும் முக்கியத்துவத்தையும் குறிக்கும். 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாட்டு அறிஞர்கள் பண்பாடு என்பதனை நாகரிகம் என்கிற சொல்லோடு ஒப்பிட்டு நோக்குகின்றனர். பாவாணர் கருத்துப்படி, பண்பாடு என்பது திருந்திய நாகரிகம், ஒழுக்கம், அகக்கூறு, புறக்கூறு என வகைப்படுத்தப்படும். அறத்தின் வழி வாழுதல் தமிழர் பண்பாடாகும். இதனை வள்ளுவர், "அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்"[1]என்று தமிழ் பண்பாடு அறம் சார்ந்தது என்று உலகுக்கே எடுத்துக் காட்டுகிறார். இன்சொல் பேசுதல், பெண்களை மதித்தல், மூத்தோரை கனம் பண்ணல், பெற்றோரை மதித்தல், கற்றோரை வியந்து பார்த்தல், உயிர்களிடத்தில் அன்பு கொள்ளல், செய்ந்நன்றி மறவாமை, கல்வி, நட்பு, போர், வீரம் என்று தனிபெரும் பெருமை கொண்டது தமிழர் பண்பாடாகும். இத்தகைய பண்பாட்டினைப் போற்றி பாதுகாப்பது தமிழர் கடமையாகும்.

மனிதனின் பண்பாட்டிற்குள் சமூக பழக்கவழக்கங்கள்,மொழி, உணவு,நம்பிக்கைகள், இசை, தொழில், வாழ்வியல் வழிமுறைகள் அடங்கும். தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல்,ஈகை, கொடை என பரந்துபட்டது. வாழும் முறையே பண்பாடு என்கிறோம். இப்படித்தான் வாழ வேண்டுமென்ற வரன்முறைக்கு உட்பட்டதே நம் தமிழர் பண்பாடு ஆகும்.

**பண்பாடு – விளக்கம்**

பண்பாடு என்பது விழுமியப் பண்புகள் நிரம்பப் பெற்று அனைவரிடமும் அன்புற்று வாழுவதைக் குறிக்கும். உலக நடைமுறைக் கேற்றார் போல, ஒத்து நடப்பதே பண்பாடு ஆகும். "பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்"[2] எனக் கூறும்போது பண்பாட்டின் நிலையை அறிந்து கொள்ள முடிகிறது. திருக்குறள் மற்றும் பழமொழி நானூறு பண்பாட்டின் பெட்டகமாக அமைந்திருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை நிரம்பியவரே சான்றோர்; அவர்களே சிறந்த பண்பாட்டாளர்கள் ஆவார்.

"அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"[3]

மக்களாய் இருந்தும் பண்புகளைப் பெறாதவர்கள் உயர்திணையாக அல்லாமல் அஃறிணையாகக் கருதப்படுவர். பொறுமை, சான்றாமை, விட்டுக்கொடுத்தல், பிறர்நலன் காத்தல், நற்சார்பு என்கிற

வடிவங்களில் ஒருவரின் பண்பாடானது வெளிப்படுகிறது.

"பிறர்மனை கள் களவு சூது கொலையோடு
அறனறிந்தார் இவ்வைந்து நோக்கார் திறனியரென்றும்"4

(ஆசாரக்கோவை:37)

பிறரது மனைவியை விரும்புதல், மது அருந்துதல், திருட்டுத் தொழில்களில் ஈடுபடுதல், சூதாட்டங்களில் ஈடுபடுதல், கொலை செய்தல் எதிலும் பண்பாட்டில் நிலைத்த அறத்தை உடையவர்கள் ஈடுபடமாட்டார்கள். சமுதாயத்தின் கலைவளம், இலக்கிய வளம், அற உணர்வுகள், சமய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் எல்லாம் சிறந்த பண்பாட்டின் படைப்புகளாக கருதப்பட்டன. பண்பாடு எனப்படுவது கல்வியறிவோடு கூடிய ஒழுக்கம், நடத்தைமுறைகளை வகைப்படுத்துவதாகும்.

**பழமொழி நானூறு வலியுறுத்தும் தமிழரின் பண்பாட்டு மரபுகள்**

**ஈகையின் மாண்பு**

பழமொழி நானூறு உணர்த்தும் பண்பாட்டு விழுமியத்தில் தலைச்சிறந்த நிற்பது வறியவர்களுக்கு உதவுதல் என்னும் ஈகைப் பண்பாடு ஆகும். மனமுவந்து வழங்கப்படும் பொருள் கொடை அல்லது உதவி எனப்படுகிறது. பிறர் புகழ்வதற்காகச் செய்யப்படும் ஈகை இஸ்லாத்தில் இகழப்படுகிறது.

"உண்ணான் ஒளிநிறான் ஓய்கு புகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே"[5]

(நாலடியார்:9 செல்வம்நிலையாமை)

ஒருவன் நல்ல உணவுப் பொருட்களை உண்ணாமலும், தனது மதிப்பை நிலைத்திடச் செய்யாமலும், புகழினைத் தரக்கூடியச் செயலினைச் செய்யாமலும், வறுமையினைக் களையாமலும், இரப்பவர்களுக்கு பொருளினைக் கொடுக்காமல் இருப்பவன்; தனக்கும், பிறருக்கும் பயனில்லாத வகையில், பொருளினை வைத்திருப்பவன் அப்பொருளை இழந்தவன் ஆகிறான். மேற்கண்ட பாடலில் ஈகையின் மாண்பு உரைக்கப்படுகிறது.

"உதவிப்பயன் உரையார் உண்டிபழியார்
அறத்தோடுதான் நோகற்ற நோன்பு வையார்"[6]

(ஆசாரக்கோவை - 88)

சான்றோர்களின் பண்புகளைப் போற்றி வளர்ந்தவர்கள் பிறருக்கு செய்த உதவிகளையும், அவற்றால் விளைந்த பயன்களையும் எடுத்துக் கூறமாட்டார்கள். ஒருவருக்கு அளிக்கப்பட்ட உணவு குறித்து இழித்தும், நோன்பினைத் தானே புகழ்ந்தும் பேசமாட்டார்கள்; இதில் சான்றோர் போற்றிய நோன்பின் மாண்பு உணர்த்தப்படுகிறது. ஈகை ஒரு மனிதனுக்கு சமுதாயத்தில் மதிப்பினையும், மனதிற்கு நிறைவும், மகிழ்ச்சியும் அளிக்கக்கூடிய பண்பாகும்.

"அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கி யல்பு"[7]

அஞ்சாதிருத்தல், வறியவருக்கு உதவுதல், அறிவுடன் இருத்தல், ஊக்கம் இவையனைத்தும் தலைவனுக்குரிய இயல்பாகும்.

"சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்

பேரிய பொருள் கருது வாரே; - விரிபூ"

(ப.நா 15:1-4)

ஒருவருக்கு பொருள் கொடுத்து உதவி அதனால் பெரும் பொருள் தம்மை வந்தடையும் என்று நினைப்பவர்கள் தர்மவான்கள் அல்லர். சிறிய அயிரை மீனைத் தூண்டிலில் போட்டு வராலை பிடிக்கின்றவர்களைப் போன்றவர்கள் ஈகை செய்வது கடமை எனக் கருதாது கைமாறு கருதாது உதவ வேண்டும். இக்கருத்தினை திருவள்ளுவரும்,

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்

நன்மை கடலின் பெரிது"[8]

இவருக்கு உதவினால் இது கிடைக்கும் என்று எண்ணாதவராய் இருக்க வேண்டும். அவர் செய்த உதவியுள்ள நன்மையை மட்டும் ஆராய்ந்து பார்த்தால் அது கடலினை விட பெரியதாகும்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"[9]

என்றார் வள்ளுவர். செல்வத்தின் பயனேஈதல் என்கிற உயரிய கோட்பாட்டை உலகறிய வைத்தவர்கள் தமிழர்.

"மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்

பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்"

(ப.நா 113:1-4)

மாரி என்ற ஒன்று இல்லாமல் போன காலத்தில், பாரி வள்ளலின் மகள் பாணனுக்கு நீர் உலையுள் பெய்து, சமைத்து வைத்திருந்த சோற்றுப்பானையைத் திறந்து பொன்மனம் கொண்டு சோற்றைக் கொடுத்து உதவினாள். இப்பாடலில் வீட்டின் வாயில் தேடி வந்தவர்க்கு எதையேனும் தவறாது கொடுத்து உதவ வேண்டும். இதில் பொன்னைப் பெய்து கொண்டு வந்து சோறிடுவது போல, என்னும் பழமொழி வந்துள்ளது. கொடுப்பவர் பலராக இருப்பினும் வருபவர் குறிப்பறிந்து அவர் கேளாததன் முன்பே அவர் கருதி வந்ததைக் கொடுத்து உதவுவதே சிறந்த கொடையாகும்.

**பழமொழி நானூற்றில் கொடைவளம்:**

பழமொழி நானூற்றில் சங்கத் தமிழ் மக்கள் உயிரினும் மேலாகப் போற்றி வந்த கொடையின் சிறப்பு, பழமொழி வாயிலாக உணர்த்தப்படுகிறது.

"விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத்தவர்க்கும்

வருத்தம் பசிகளையார் வம்பர்க்கும் உதவல்"

(ப.நா 38:1-4)

செல்வமானது இருந்தும், பசித்தவர்களுக்கு உதவாது இருந்தால் அது பயனற்ற செல்வமே ஆகும். தம்மை விரும்பி வந்தவர்களுக்கும் தம்முடைய சுற்றத்தாருக்கும் அவர்களை வருந்துகின்ற

பசியைப் போக்காதவர்கள்; யாரோ ஒரு புதியவருக்கு உதவுதலானது தன்னை மிகவும் பாதுகாத்து வளர்த்தார்க்கு உதவாது நெடுங்காலம் கடந்து, புதியவர்களுக்கு உதவுவது கரிய பனையின் இயல்பினைக் குறிக்கும்.

"உதவிப் பயன் உரையார் உண்டிபழியார்
அறத்தோடுதான் நோற்ற நோன்பு வையார்
திறத்துளி வாழ்வது என்பார்"[10]

(ஆசாரக்கோவை-88)

திறன்மிக்க சான்றோரின் பண்புகளைப் போற்றி, தானும் அவர்களின் வழி நடப்பவர்கள், தாம் பிறருக்கு செய்த உதவிகளையும், அவற்றால் விளைந்த பயனையும் கூற மாட்டார்கள்.

**கொடுத்து உதவாதவன் செல்வம்**

பொருள் இல்லாத வறியவர்களுக்கு ஒரு பொருள் கொடுத்து உதவாதவனுடையச் செல்வம், மிக்க அழகு பெற்றவள் தனியாக வாழ்ந்து முதுமையுற்றது போன்றது.

"அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று" [11]

(குறள்.1007)

சங்க காலத்தில் வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தை சேர்த்து வைக்கும் இடமென்று மக்கள் கருதினர். முகமது நபி காலத்தில் ஈகைப் பெருநாள் கொண்டாடப்படுகிறது. பிறருக்கு செல்வம் கொடுத்துதவுவது பற்றி நாலடியார், திருக்குறள் போன்றவற்றில் கூறப்பட்டுள்ளது. நமக்குப் பொருள் இல்லாத காலத்திலும் பொருள் இருந்த காலத்தினைப் போலவே மகிழ்ந்து பிறக்கும் நற்குணமுள்ள மக்களுக்கு வானுலகக் கதவுகள் என்றுமே திறந்து இருக்கும்.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து"[12]

(குறள்.221)

சங்க இலக்கியங்களில் பகிர்ந்துண்ணல், பரிசில், உணவிடல்,ஈகை என்ற பலநிலைகளில் கொடையானது வழக்கிலிருந்து உள்ளது.

**பழமொழி நானூற்றில் வெளிப்படும் பண்டைய தமிழ் மக்களின் வீரம் தொடர்பான செய்திகள்**

பகை பெரிதானால் அதனை எதிர்த்து மோதி அழியாது அதற்கு ஏற்ற தக்க துணையுடன் வந்து வெல்வதே சிறப்பு ஆகும். பண்டையத் தமிழர்கள் போரிடும் முன்பு காலமறிந்தே செயல்பட்டனர்.

"இகலின் வலியாரை எள்ளி எளியார்
இகலின் எதிர்நிற்றல் ஏதல் - அகலப்போய்
என்செய்தே யாயினும் உய்ந்தீக, சாவாதான்
முன்கை வனையுந் தொடுட்"

(ப.நா 186:3-4)

“கறுவழங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க அதுவே,

சிறுகுரங்கின் கையாற் றுழா”

(ப.நா 190:3-4)

பகைவரிடம் நேரடியாக மோதாது; பகைமன்னர்களைச் சார்ந்துள்ள சிறுசிறு படைகளை அழித்துவிட்டு அதன்பிறகே பகைவரின் படையைத் தாக்கி அழிக்க வேண்டும்.

“உருமிசை முழக்கென முரசம் இசைப்பக்

கணைக்காற் றெடுத்த கண்ணகன் பாசறை

இழிதரு குருதியோடு ஏந்திய ஒளவாள்

பிழிவது போல பிட்டை ஊறு உவப்ப”[13]

(புறம்.373)

கிள்ளி வளவன் கொங்கு நாட்டை வெற்றி கொண்டு, பிறகு சேரர்கள் ஆண்டு வந்த குடநாட்டைத் தாக்கி வெற்றி கொண்டான். கோவூர்கிழார் என்னும் புலவர் பாடியது. போர் செய்வதை விரும்பி திரண்ட பெரும்படையால் கொங்கு நாட்டவரை புறமுதுகுக் காட்டி ஓடச் செய்த வெற்றி வேந்தனே! எனப் புகழ்ந்து உள்ளார். மேற்கண்ட பாடலில் வேந்தனின் படையைக் கண்டு போரில் ஈடுபடாது சென்ற பகைமன்னர்கள் பற்றி உரைக்கப்படுகிறது.

வீட்டுத் தோட்டத்திலே ஒருவன் தனக்குப் பயன் தருமாறு வளர்த்து வரும் மரத்தைப் போல, பகைமன்னர்களை தம் சொற்களால் வளைத்து தன் அடி நிழலின்கீழ் இருக்கச் செய்து அடக்கிக் கொள்வார்கள்.

“சொல்லின் வளாஅய்த்தம் தாள்நிழல் கொள்பவே

கொல்லையுள் கூழ்மரம் போன்று”

(ப.நா 183:3-4)

மன்னர்கள் தம் பகைவரையும் தமக்கு அடிப்பட்டவராக்கி ஆள்தலையே செய்ய வேண்டும். கூழ்மரம் என்பது கூழைப்பலா மரம் ஆகும்.

**நட்பு**

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். உண்மையான நட்புக்கு இலக்கணம் வகுத்துள்ளனர். நட்பினைக் குறித்து பல்வேறு கருத்துக்களை அதிகாரங்களின் வாயிலாக விளக்கியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை,

“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து

அகநக நட்பது நட்பு”[14]

(குறள்.786)

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பாகும்.

**பழமொழி நானூற்றில் விளக்கும் நட்பின் மாண்பு**

பண்டைய தமிழர்கள் போற்றி வந்த அறங்களுள் தலையாய மாண்பு நட்பாகும்.

"ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே"

(ப.நா 77:3-4)

சிறந்த நண்பர்கள் தம் கருத்;திலே ஒருமித்த எண்ணமுடையவர்கள்; உமையவள் போல இரண்டறக் கலப்பதே உண்மை நட்பாகும்.

"தாஅய இழியும் மலைநாட! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு"

(ப.நா 68:3-4)

விலங்கேயானாலும், தம்மோடு பழகியவர்களை விட்டுப் போவதற்கு இசையாது. பேயோடு பழகிவிட்டாலும், அதனை விட்டு பிரிவது என்பது துன்பம் உடையதாகும். நட்புச் செய்வதற்கு முன்னர், தகுதி உடையவரை நாடியே நட்புச் செய்தல் வேண்டும். இதனையே வள்ளுவர் கூடாநட்பு என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். இதனை பழமொழி நானூறு

"பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்!
ஏப்பிழைத்தக் காக் கொள்ளுமாறு"

(ப.நா 103:3-4)

ஒருவனைக் கெடுக்க முயன்று, அது முடியாமல் போக, அவனுடைய நண்பராகி அவனைக் கெடுக்க முயல்வர். அவர்களின் தொடர்பு அறவே கூடாது என்கிறார்.

**விருந்தோம்பல்**

மனித வாழ்வில் உயர்ந்த பண்பாகப் போற்றப்படுவது விருந்தோம்பலாகும். தமிழ் மக்களின் அன்பு, மனிதநேயம், பிறர் நலன் பேணும் பாங்கு முதலியவற்றை உணர்த்துவதாய் விருந்தோம்பல் அமைகிறது. விருந்து என்றால் புதுமை என்பது பொருள். உறவினர் மற்றும் நண்பர் அல்லாதவராய் புதியதாக வரும் மக்களை 'விருந்து' என்றனர் தமிழர்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"[15]

(குறள்.86)

என்றார் வள்ளுவர். விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தத்தைக்; கொடுத்தாலும், அதனை வேண்டாம் என்று சொல்லுவதற்குச் சமமாகும். இதனை வள்ளுவம்,

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டாற்பாற் றன்று"[16]

(குறள்.82)

விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமையை அறிய முடிகிறது. சங்க அக, புறப் பாடல்களிலும், திருக்குறளிலும், சிலப்பதிகாரம், பெரியபுராணம் ஆகியவற்றிலும் விருந்தோம்பல் பற்றி செய்திகள் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரக் காலத்தில் கோவலன் கண்ணகிக்கு திருமணம் நடைபெற்ற பிறகு, அவர்களை தனிக்குடித்தனம் வைத்தனர். இதற்கான காரணத்தை இளங்கோவடிகள் பின்வருமாறு விளக்குகிறார்.

"மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண"[17]

(சிலம்பு: மனையறம்:85-88)

மகளிர் கணவருடன் சேர்ந்து வாழும்போது, விருந்தினரைப் பேணும், கடமையும் உரிமைப் பெற்றிருந்தனர். கணவரைப் பிரிந்த நிலையில் விருந்தோம்பும் நிலையை இழந்தனர் என்பதையும் சிலம்பு வாயிலாக நம்மால் அறிய முடிகின்றது.

**பழமொழி நானூற்றில் விருந்தோம்பல் தொடர்பான செய்திகள்**

பழமொழி நானூற்றில் அதிகப்படியாக விருந்து தொடர்பான செய்திகள் காணப்படினும், ஒரு சில இடங்களில் விருந்தோம்பல் குறித்துக் காண முடிகிறது. வறியவர், செல்வரை விருந்தாக பெற்று என்னதான் கஷ்டப்பட்டு விருந்து கொடுத்தாலும், தம் செல்வர்கள் திருப்தி அடைந்து மனநிறைவு கொள்ளப் போவதில்லை.

"நல்கூர்ந் தவர்க்கு நனிபெரியர் ஆயினார்
செல்விருந்த தாகிச் செல வேண்டா – ஒல்லது
இறந்தவர் செய்யும் வருத்தம், குருவி
குறங்கறுப்பச் சோரும் குடர்"

(ப.நா 157:1-4)

தம் தகுதிக்கு மீறி, விருந்து செய்வதற்குப் படுகின்ற வருத்தம் அதிகமாயிருக்கும். இருந்தாலும், செல்பவர் நிறைவு அடையவும் முடியாது. பெருஞ்செல்வம் உடையவர்கள் வறியவர்களுக்கு விருந்தாக போக வேண்டாம்.

இன்றளவில் இயந்திரத்தனமான வாழ்க்கை நிலை, விருந்தோம்பலுக்கு தடையாகிறது. வேலை வாய்ப்பு குறைவு, கல்வி மற்றும் திருமணத்திற்கான பணச்செலவு, விலைவாசி உயர்வு ஆகியவை பொருளாதார சிக்கல்களை ஏற்படுத்துகிறது. இதுவும் விருந்தோம்பலைப் பாதிக்கும் காரணியாக அமைகிறது. நகர வாழ்க்கை சிறந்திருக்கும் இக்காலத்தில் பிறரைப் பற்றி எண்ணிப் பார்க்கும் மனப்பான்மை குறைந்துள்ளது.சங்க இலக்கியங்களின் வாயிலாக மிளிரும் தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளான ஈகை, கொடை, வீரம், நட்பு, விருந்தோம்பல் முதலியவற்றை எடுத்துக்காட்டும் விதமாக இக்கட்டுரையானது அமைகிறது. சமூக உருவாக்கத்திற்கு பயன்பாட்டில் தனிமனித கூறுகளை பழமொழி நானூற்றின் வாயிலாக நினைவு கூறும் விதமாக அமைகிறது.

**மேற்கோள்கள்**

1. திருக்குறள், குறள் எண்: 35 அதிகாரம்: அறன் வலியுறுத்தல்.
2. கலித்தொகை.
3. திருக்குறள், குறள் எண்: 997 அதிகாரம்: பண்புடைமை.

4. ஆசாரக்கோவை பா.எண் :37
5. நாலடியார் செல்வம்பா.எண் :09, நிலையாமை.
6. ஆசாரக்கோவை பா.எண் :88
7. திருக்குறள், குறள் எண்: 382 அதிகாரம்: இறைமாட்சி.
8. திருக்குறள், குறள் எண்: 103 அதிகாரம்: செய்ந்நன்றி அறிதல்.
9. திருக்குறள், குறள் எண்: 231 அதிகாரம்: புகழ்.
10. ஆசாரக்கோவை பா.எண் :88
11. திருக்குறள், குறள் எண்: 1007 அதிகாரம்:நன்றியில் செல்வம்.
12. திருக்குறள், குறள் எண்: 221 அதிகாரம்:ஈகை.
13. புறநானூறு,பா.எண் :373
14. திருக்குறள், குறள் எண்: 786 அதிகாரம்:நட்பு.
15. திருக்குறள், குறள் எண்: 86 அதிகாரம்:விருந்தோம்பல்.
16. திருக்குறள், குறள் எண்: 82 அதிகாரம்:விருந்தோம்பல்.
17. சிலம்பு:(மனையறம் படுத்த காதை 85-88)

**துணைநூற் பட்டியல்**

1.பழமொழி நானூறு
ஆசிரியர் : புலியூர் கேசிகன்
பதிப்பாண்டு : 2021
அச்சிட்டோர் : சூர்யா பிரிண்டர்ஸ் அண்ட் பைண்டர்ஸ்,மதுரை.
வெளியீடு :ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை -17.

2.திருக்குறள்
ஆசிரியர் : புலவர் குழந்தை
முதல் பதிப்பு : 2005
வெளியீடு : சாரதா பதிப்பகம்
ஒளி அச்சு : சிவம்ஸ் ,சென்னை-18.
3.ஆசாரக் கோவை மூலமும், உரையும்
பதிப்பாசிரியர் : எஸ் கௌமாரீஸ்வரி
முதல் பதிப்பு : 2006
வெளியீடு : சாரதா பதிப்பகம்,
சென்னை-14.
ஒளியச்சு : ஜெய் ஜீனா

4.நாலடியார் மூலமும், உரையும்
பதிப்பாசிரியர் : எஸ் கௌமாரீஸ்வரி
முதல் பதிப்பு : 2006
வெளியீடு : சாரதா பதிப்பகம்,
சென்னை-14.
ஒளியச்சு : ஜெய் ஜீனா

5.புறநானூறு மூலமும் ,உரையும் (இரண்டாம் பகுதி)
உரையாசிரியர் புலவர் அ.மாணிக்கனார்
முதல் பதிப்பு : 1999
வெளியீடு :வர்த்தமானர் பதிப்பகம், சென்னை- 17.
அச்சிட்டோர் : மணி ஆப்செட் ,சென்னை – 5.

6.சிலப்பதிகாரம் மூலமும், உரையும்
உரையாசிரியர்: ந.மு வேங்கடசாமி நாட்டார்
முதல் பதிப்பு :2008
வெளியீடு: ராமையா பதிப்பகம் ,சென்னை -14.
அச்சிட்டோர்: கிளாசிக் பிரிண்டர்ஸ்,சென்னை -2.